
JOURNAL WITH 3.085 IMPACT FACTOR SIJ TAMIL STUDIES

ISSN 2454-3993

■ மலர் 3 ■ சிறப்பிதழ் 4 ■ மார்ச், 2019

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

SHANLAX #SINCE1990



பதிப்பாசிரியர்கள்
திருமதி. மு. கவிதா
முனைவர் ஆ. ஜோஸ்பின் செலின் மேரி

தொகுதி - 2

புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

மற்றும்

சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

## "பன்நோக்குப் பார்வையில் இலக்கண இலக்கியங்கள்"

தமிழ்த்துறை

புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
அமல அன்னை நகர், தாமரைப்பாடி,
திண்டுக்கல் - 624 005.

UGC Approved Journal Number: 40729
VOLUME 3| SPECIAL ISSUE 4| MARCH 2019
Shanlax International Journal of Tamil Studies
(A Peer-reviewed - Scholarly Indexed Quarterly Journal)

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE
PKP PUBLIC KNOWLEDGE PROJECT
OJS OPEN JOURNAL SYSTEMS
SHANLAX INTERNATIONAL JOURNALS
editorsij@shanlaxjournals.in | www.shanlaxjournals.in

Scanned By Scanner App

29 நாலடியாரில் செல்வ நிலையாமை 116
**சௌ. ஜான்சி ராணி**

30 பதிற்றுப்பத்தில் சாரியைப் புணர்ச்சி 121
**கி. ஹரிஹரன்**

31 சீவக சிந்தாமணியில் சமண சமய அடிப்படைக் கொள்கைகள் 125
**கா. ப. இலக்கியா**

32 இலக்கணத்தில் தோழிஓர் அறிமுகம் 129
**ம. ஜெயலெட்சுமி**

33 எஸ்.ரா.வின் புதினங்களில் வறுமை 132
**அ. கலையரசி**

34 சிவவாக்கியர் பாடல்களில் இறைமை 136
**கா. காளீஸ்வரி**

35 வ.சுப.மாணிக்கனாரின் ஏழிளந்தமிழ் 140
**செ. கவிதா**

36 வாஸந்தியின் புதினங்களில் உளவியல் அணுகுமுறை 144
**திருமதி மு. கவிதா**

37 திருக்குறளில் அணிநலன் 149
**ச. கொடியரசு**

38 கதைமாந்தர்களின் பண்புகள் வழி அற ஒழுக்கம் 153
**சி. கோகிலா**

39 கடையேழு வள்ளல்களின் சிறப்புகள் 158
**வா. கிருஷ்ணபிரியா**

40 தமிழ் புனைகதைப் படைப்புக்களமும் கருத்து நிலையும் 162
**அ. குமார்**

41 'கடல் புரத்தில்' - இனவரைவியல் பார்வை 165
**க. லதா**

42 குறுந்தொகையில் செவிலித்தாய் 168
**மு. கவிதா**

43 வள்ளுவரின் பார்வையில் சமுதாயம் 171
**சுப. முருகன்**

44 கபிலர் பார்வையில் தலைவியின் ஆளுமைத்திறன் 173
**ம. முத்துச்செல்வி**


Scanned By Scanner App

# வாஸந்தியின் புதினங்களில் உளவியல் அணுகுமுறை

**திருமதி மு. கவிதா**
இணைப் பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்
புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தாமரைப்பாடி

**மலர்:** 3

**சிறப்பிதழ்:** 4

**மாதம்:** மார்ச்

**வருடம்:** 2019

**ISSN:** 2454-3993

குடும்பச் செயற்பாட்டால் பொருளாதாரத்தைப் போன்றே மனித மனமும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருக்கின்றது. ஒவ்வொருவரும் ஏதேனும் ஓர் உளச் சிக்கலுக்கு உட்பட்டவராகத்தான் இருக்கின்றனர். உளச் சிக்கல்கள் அவனுக்கு மட்டும் பாதிப்பைத் தருவதில்லை. அவனோடு தொட்புடைய பிறருக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைகின்றது. நாவல் ஆசிரியர்களில் உளவியலைத் தம் படைப்பிற்கு அடித்தளமாகக் கொள்பவர்களில் வாஸந்தியும் ஒருவர். இவரது நாவல்களில் மிகுதியும் குடும்ப உறவு நிலையே பெரும்பாலான சிக்கல்களுக்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றது. மனத்தைப் பாதிக்கும் மன அழுத்தத்திலிருந்தோ ஏக்கத்திலிருந்தோ விடுபட அன்பே அருமருந்தாக அமைவதனை அவர் பல புதினங்களில் தெளிவுபடுத்துகின்றார்.

### வாஸந்தியின் புதினங்களில் உளவியல்

சமூக நாவல் இலக்கியம் சமுதாயத்துடன் எவ்வளவு நெருங்கிய தொடர்புடையதோ அவ்வளவு உளவியலுடனும் தொடர்படையதாகத் திகழ்கிறது. சமூக நாவல் வாழ்க்கையின் அடிப்படையில் எழுவதால் தனிமனிதச் சிக்கல்களும் தீர்வுகளும் உளவியல் அடிப்படையில் அமைய வாய்ப்புக்கள் மிகுதியாக உள்ளன. **"எந்தக் கலைப்படைப்பும் உளவியலில்தான் பிறக்கிறது உலகியலையே தன் உடலாகக் கொண்டு அமைகிறது. அதன் அடிக்கருத்து (Theme) நாம் உலகத்தில் கண்டதும் கேட்டதும் போல் இருக்கிறது. அதில் கூறப்படும் அனுபவம் நம் அனுபவத்திற்கு முற்றிலும் ஒத்து வருகிறது"** என்ற கூற்று வாஸந்தியின் படைப்புக்களுக்கும் பொருந்தும். பாலியல் சிக்கல்கள் (Sexual Problems) உடற்குறை சிக்கல்கள் (Handicapped Problems) நுண்ணறிவுத் திறன் (Intelligence Quotient) குறைவு, பிரச்சனைக் குழந்தை (Problem Child) பாலியலில் நெறிதிறம்பியோர் (Perverted) தாய் மகன் அதீத உணர்வு (Electra Complex) பிறரை அடக்கியாளும் ஆதிக்க உணர்வு (Hercules Complex) முதலியவற்றைக் கருப்பொருளாகக் கொண்டு பெரும் கதை எழுதத் தொடங்கினர். உளவியலை அடித்தளமாகக் கொண்டு படைப்பவர் வாஸந்தி.

இவரது படைப்புகளில் சிலர் உளவியல் மாணவராக அறிமுகமாகின்றனர். ஃப்ராய்ட் முதலிய உளவியல் துறை அறிஞர்களின் பெயர்களும் அன்னாரின் கருத்துக்களும் வாஸந்தியின் புதினங்களில் ஆங்காங்கே இடம் பெறுகின்றன. ஆசிரியர் உளவியலைக் கற்றிருப்பதோடு அதனைக் கருவாகக் கொண்டு இலக்கியம் படைப்பதிலும் மிக்க விருப்பம் உடையவர் என்பது புலனாகின்றது. மேலும், **"ஒவ்வொரு படைப்பாளியும் உளவியலைத் தனியே கற்பதில்லை வேண்டுமென்று புகுத்திப் பாடுவதில்லை"** என்னும் கருத்திற்கேற்பவும் இவரது பிற படைப்புக்களில் உளவியல் இயல்பாக இடம் பெற்றிருத்தலையும் காணலாம்.



Scanned By Scanner App

மனித வாழ்வில் குழந்தைப் பருவம் மெழுகு போன்றது. மெழுகை நெகிழ்வித்து விரும்பும் வடிவம் கொடுத்தல் போன்று இப்பருவத்தில் தான் மனிதன் மனிதனாக வாழக் கூடிய அடிப்படைப் பண்பு நலன் அமைவதால் பெற்றோர் - குழந்தை உறவு சிக்கலற்றதாக, நெருக்கமுடையதாக, அன்புப் பிணைப்புடையதாக, இனியதாக அமைய வேண்டியதன் இன்றியமையாமையை ஆசிரியரின் சிலகதைமாந்தரின் வழி எதிரொலிக்கின்றது.

ஆகாச வீடுகள் புதினத்தில் ராஜீ நுண்ணறிவுத் திறன் குறைந்தவன். எட்டு வயதுச் சிறுவன் ராஜீவிடம் தாய் லலிதாவும் அத்தை மகள் மீனுவும் அன்பும் பரிவும் காட்டி, இரக்கத்துடன் தோழமையுடன் நடந்து கொள்கிறார்கள். அதற்கு மாறாக, அவன் செயல் ஒவ்வொன்றிலும் வலிந்து குற்றம் கண்டு ஆங்காரத்துடன் அடிப்பதும் திட்டுவதும் தந்தையின் வழக்கம். **"கண்டிப்பான கட்டுப்பாடுகளுக்கு ஆளான குழந்தை பெற்றோர்களால் புறக்கணிக்கப்பட்டதாக உணர்கின்றான்"** என்பதற்கேற்ப, தன் மகனின் எதிர்கால நலனில் அக்கறை கொண்டு, அன்பையெல்லாம் உள்ளத்தில் புதைத்துக்கொண்டு, உக்ரமூர்த்தியாக வீட்டினுள் நடமாடும் தந்தையின் உள்ளத்தை உணர்ந்து கொள்ள முடியாத ராஜீ, தந்தை தன்னை வெறுப்பதாக எண்ணி உள்ளம் வருந்துகிறான். லலிதா, மீனுவின் அன்பும் கனிவான சொற்களும் செயல்களும் அவன் இதயத்தில் பதியாது தந்தையின் சிடுசிடுத்த முகமும் கோபப்படும் கடுஞ்சொற்களும் நெஞ்சத்தில் நிறைந்து அவனைக் கோழையாக்கித் தற்கொலை செய்து கொள்ளச் செய்கின்றன.

ராஜீவின் தந்தை சபேசனின் பிடியில் வளரும் இந்த குழந்தையைப் பற்றி மீனு நினைக்கையில், **"இந்தப் பிள்ளை வேறே எங்கேயாவது பிறந்திருக்க வேண்டும் அல்லது அப்பாவுக்கு ஜோடியாக முரட்டுத்தனத்தோடு பிறந்திருக்க வேண்டும். இப்படி இரண்டும் கெட்டானாய்ப் பிறந்து, பூ மாதிரி ஒரு மனசா, இந்த பிஞ்சு எப்படி வளரப் போகிறது? 'என்னுடைய பிராப்த கர்மம்!' விவரம் தெரிந்த நாளிலிருந்து இதே வார்த்தைகளை தந்தையின் நாவிலிருந்து கேட்டுக் கொண்டிருக்கும் இவன் எந்த மாதிரி மனுஷனாய் உருவாகப் போகிறான்?"** என்று வருந்துகிறான். கண்டிப்பான பெற்றோர்கள், பாதுகாவலர்கள், ஆசிரியர்கள் தங்கள் விருப்பப்படி ஒழுக்க முறைகளைக் கடுமையாக அநாகரிகமாகக் குழந்தைகள் மீது திணித்து தங்கள் நெறி முறைகளுக்கு ஏற்பக் கொண்டு வருவதில் வெற்றி பெற்றிடலாம். ஆனால் அக்குழந்தைகளின் உள்ளம் பாதிக்கப்படுகிறது. இவர்கள் வெளித்தோற்றத்திற்கு அமைதியாகவும், நல் நடத்தையுடனும் எதிர்க்காத தன்மையுடனும் விளங்குவர். ஆனால் இவர்கள் மனத்தில் கடுமையான கோபவுணர்வு இருக்கும். அதனால் மகிழ்ச்சியற்று, பாதுகாப்புணர்வற்றுக் காணப்படுவர். தம் ஆர்வத்தை, தனித்திறமையைக் கட்டுப்படுத்தி வளர்வர். அதுவே பாதுகாப்பின்மைக்கு இட்டுச் செல்கிறது என்பர். இதன் அடிப்படையில் 'இடைவெளி தொடர்கின்றன' புதினத்தில் ஹரி என்னும் சிறுவன் அமைகின்றான்.

ஹரியின் பெற்றோர் பிரிந்து வாழ்கின்றனர். பிரிந்தாலும் இருவருக்கும் ஹரியிடம் அளவு கடந்த பற்றும் பாசமும் உண்டு. தன் மனைவி நர்மதாவைப் போல் இசை, நாட்டியம் முதலிய நுண்கலைகளில் ஹரி ஈடுபடக்கூடாது என்று விரும்பும் தந்தை ஷோமண்ணா கௌடா அவனைத் தன்னைப் போல் தொழிலதிபர் ஆக்கக் கருதி இராணுவக் கட்டுப்பாட்டுடன் வளர்க்கிறார். தாயில்லாது வெறிச்சோடிக் கிடக்கும் மாளிகையின் தனிமையும் தாயின் நினைவும் கண்டிப்பான வளர்ப்பும் ஹரியின் மனத்தைப் பாதிக்கின்றன. அவை அவனது களங்கமற்ற முகத்தில் அச்சம், சோகம், கலவரம், வேதனை முதலான உணர்வுகளை நிறைவித்துக் குழந்தைத் தன்மைக்கு மாறாக முதிர்ச்சியைத் தோற்றுவிக்கின்றன. கௌடாவின் நூலகத்தில் பணிபுரியும் நந்தினி ஹரியைப் பற்றி நினைக்கும் போது,

**"என் பிள்ளையை எப்படி வளர்ப்பதென்று எனக்குத் தெரியும்!" அந்தக் கண்டிப்புக்கும் அதிகாரத்துக்கும் கோபத்திற்கும் அடிப்படைக் காரணம். மனத்தில் புதைந்திருந்த ஏமாற்றம், துயரம், பயம் என்று அவள் நினைத்துக் கொண்டாள். மனைவியைத் தான் அடக்க முடியவிலை. பிள்ளையையாவது அடக்கித் தன் இஷ்டப்படி வளர்க்க வேண்டும் என்னும் வெறி அவருள் ஏற்பட்டிருக்க வேண்டும். மனைவியைத் தான் அடக்க முடியவில்லை. மனைவியின் குணங்களிலிருந்து முழுவதும் மாறுபட்டுத் தன்னுடைய பிம்பமாய் அவன் வளர வேண்டும் என்னும் வெறி ஏற்பட்டிருக்க வேண்டும். இவனாவது தன் வசம் தங்கியிருக்க வேண்டுமே என்கிற பயம் அவரை வாட்டிக்**

**கொண்டிருக்க வேண்டும். ஆனால், இந்த மாதிரி மிலிட்டரி கெடுபிடியுடன் மெல்லிய உணர்வுகள் கொண்ட ஒரு குழந்தையை வளர்த்தால் அது பதினைந்தாவது வயதிலேயே பிய்த்துக் கொண்டு போய் விடும்"**
என்று அவள் நினைத்துக் கொண்டாள். ஹரியின் தந்தையிடம் குழந்தைகளை மென்மையாக நடத்த வேண்டும் என்று அறிவுரை கூறுகிறாள். அவர் மனைவியுடன் இணைந்து வாழ்ந்து, இருவரது அன்பையும் வெளிப்படுத்தினால் ஒழுக்கமும் ஆற்றலும் மிக்கவனாக வளர்வான் என்றும் தக்கபொழுதில் அறிவுரை கூறித் திருத்துகிறாள். ஆனால், ஆகாச வீடுகள் ராஜீவின் தந்தை சபேசனை நெருங்கி ஒருவராலும் அறிவுரை கூற இயலவில்லை. இதனால் ராஜீவின் வாழ்வு இளமையிலேயே கருகி விடுகிறது.

சிக்கல்களைத் தீர்ப்பதற்கு உளவியல் முறைப்படி வழி காட்டுவதில் 'அறிவுரை கூறல்' ஒரு தொழில்நுட்பக் கருவியாகும். **"அறிவுரை கூறல் எல்லா வயதினருக்கும் ஏற்றதொரு உளவியல் செயல் முறையாகும்"** இவ்வுத்திக்கேற்ப, நந்தினி கூறிய அறிவுரை ஷோமண்ணா கௌடா குடும்பத்தின் வேகத்தைக் களைந்து, இன்பத்தை மலரச் செய்கின்றது.

ஆகாச வீடுகள் புதினத்தில் ராஜீவை ஒத்த வயதுடைய கோபாலி கல்வியறிவில்லாத பெற்றோருக்கு பிறந்திருந்தாலும் அவன் எவ்விதக் கெடுபிடியுமின்றி வளர்வதால் உலகியல் செய்திகள் பலவற்றைத் தெரிந்து கொண்டு மிக ஆணவமாகப் பேசுகின்றான். எதையும் கண்டு ராஜீவைப் போல மிரண்டு விழிக்காமல் பளிச்சென்று சிரித்த முகத்துடன், கண்களில் குறும்புத்தனமும் பொல்லாத்தனமும் விளங்க உற்சாகமாக இருக்கிறான். குழந்தைகளுக்கு அளவுக்கதிகமான அன்பும் உரிமையும் வழங்கப்படும் போது தங்களுடைய செயல்களில் சுதந்திரமாகவும் துணிவாகவும் செயல்படுதைக் கோபாலி மெய்ப்பிக்கின்றான். எனவே, குழந்தைகளுக்குப் பெற்றோரின் அன்பும் அரவணைப்பும் போதுமான அளவு கிடைக்க வேண்டும். அன்பு அளவுக்கதிகமானாலும் குறைந்தாலும் குழந்தைகளின் மனவளர்ச்சி பாதிக்கப்படுவதனை ஆசிரியரின் படைப்புக்கள் நன்கு உணர்த்துகின்றன.

**சிதறிய குடும்பம்**

**"எதிர்பாராத விபத்து மண முறிவு, தந்தை அல்லது தாய் வீட்டிலிருந்து சென்று விடுதல் போன்ற வேளைகளில் குடும்பம் சீர் குலைந்து சிதறுண்டு விடுகிறது... குடும்பத்தின் ஒழுங்குமுறை கெடுகிறது. சிதறிய குடும்பத்தில் அமைதி குலைகிறது... எப்போதும் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையின்மையும், கிலியுணர்ச்சியுமே தலைதூக்கி நிற்கின்றன"** இக்கூற்றிற்குச் சான்றாக "ஆகாச வீடுகள்" புதினத்தின் கிருஷ்ணன் விளங்குகின்றான்.

கிருஷ்ணனின் தாய் ருக்மணி கணவன் பாலுவின் சீர்கெட்ட நடத்தையினால் மனம் வெறுத்து அவனை விட்டு விலகி மற்றொருவனுடன் வாழத் தொடங்குகிறாள். இச் செய்கையால் தாயை வெறுத்து, அவன் தந்தையுடன் தங்கி விடுகின்றான். பெற்றோரிருந்தும் பாசத்தை உணராது அனாதை போல் வளரும் கிருஷ்ணன் எங்கும் வெளியே செல்லாது, தன்னை ஒத்த குழந்தைகளுடன் கலந்து விளையாடாது, வீட்டுத் திண்ணையிலே பொழுதைக் கழிக்கிறான். இவ்வதிர்ச்சியிலிருந்து அவன் மீளும் முன்னர் தந்தை மற்றொருத்தியை வீட்டிற்கு அழைத்து வந்தவுடன் உள்ளம் அதிர்ந்து மேலும் பாதிப்புக்குள்ளாகிறான். மீனுவிடம் சொல்லும்போது அவனின் மனநிலையை உணர முடிகிறது.

**"ஒண்ணுமில்லேக்கா, நமக்கு அழுகை வறப்போ அழுதுடறது நல்லது"**
**"காரணமில்லாமே அழுகை வருமா?"**
**கண்ணீக் கறைபட்ட ஆதாரங்களில் மறுபடி ஒரு ஞானப் புன்னகை.**
**"வாஸ்தவத்திலே அழுகைக்கு உண்மையான காரணமெல்லாம் ரொம்பப் பழசு-இல்லையாக்கா?"**

அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. பதினைந்து வயசுப் பையனுக்கு இப்படியெல்லாம் பேச வருமா? அவன் அனுபவித்த சோகம் அவனைப் பேச வைக்கிறதா? அவள் பேச்சை மாற்ற நினைத்தாள்... இருந்தும் பதினைந்து வயது நிரம்பிய கிருஷ்ணன் வீட்டை விட்டு ஓடி விடுகிறான். பிறக்கும்போது எல்லோரும் சுத்தமான மனசோடு, கறைபடியாத மனசோடுதான் பிறக்கிறோம். எதையும் கற்றுக்கொள்ளும் ஆர்வமும், நல்லதைப் பிடித்துக் கொள்ளும் வேகமும், அன்பு செலுத்தும் இயல்பும் இயற்கையாகவே இருக்கிறது. இத்தனை பரிசுத்தமான வார்ப்புக்களின் இயல்புமாற வேண்டுமானால்



Scanned By Scanner App

அதற்குக் காரணம் வளர்ப்பு முறை அதற்குப் பொறுப்பு பெற்றோர்களும் சமூகமும் தான் என்று உளவியல் பேராசிரியர்கள் கூறுகின்றனர்

**நுண்ணறிவுத் திறன் குறைவு**

நுண்ணறிவுத் திறன் குறைவு பிறவிக் குறையுள் அடங்கும். இக்குறைகளுக்குக் காரணங்காட்ட இயலாது. இக்குறையுடையோர் விதி என்று உள்ளந்தளராது உளப்பிணிக்கு ஆளாகாது தம்மைத் தாமே காத்துக் கொள்ளல் வேண்டும். இதற்கு வழிகாட்டுவதே ஆசிரியர் தம் படைப்பின் நோக்கமாக அமைகின்றது. ஆகாசவீடுகள் ராஜீவும் நுண்ணறிவுத்திறன் குறைபாடுடையவர். உளவியலார் குறிப்பிடும் டமென்ஷியா (Dementia) என்னும் கோட்டி நிலைக்கு உள்ளானவன் ராஜீ. கோட்டிநிலை என்பது, **"தனியொருவரின் அறிவுச் சார்பான நடத்தை மோசமடைதல் என்பதாகும்."** ராஜீவும் வாய்ப்பாட்டைக் கூடப் பிழையின்றித் தங்கு தடையின்றிச் சொல்ல முடியாமல் தவிக்கின்றான். அச்ச உணர்வும் மருண்ட பார்வையுமுடையவனாய் இருக்கிறான். குறைவான அறிவுத்திறன் உள்ளவர்கள் அல்லது அறிவுக் குறைபாடு உள்ளவர்கள் மனதில் பதிய வைத்துக் கொள்வதிலும் மீட்டறிதலிலும் திறமை குறைந்தவர்களாக உள்ளனர் என்பதற்கேற்ப ராஜீவும் பள்ளியில் கற்றுக் கொண்ட கல்வியை நினைவிலிருத்திக் கொள்ள இயலாது திண்டாடுகின்றான். ராஜீவின் நிலை இரக்கத்திற்குரியது.

இத்தகைய அறிவுத்திறன் குறைந்த குழந்தையைப் புரிந்து கொள்ளாமல் அது விரும்பினால் கற்றுத் தேர்ச்சி பெற முடியும் என ஆசிரியர்கள் நினைத்துத் திட்டுவதைத் தவிர்க்க வேண்டும். பெற்றோரும் தங்கள் முயற்சிகள் குழந்தைக்கு நன்மையே பயக்கும் என்று அதன் திறமைக்கு அப்பாற்பட்ட வெற்றிகளை அடைய வேண்டுமென வலியுறுத்தக் கூடாது. அதன் ஆற்றலைக் கணக்கிடாமல் தங்கள் எதிர்பார்ப்புக்களைத் திணிக்கவோ, கடுமையாகத் தண்டிக்கவோ, திட்டவோ கூடாது. ஏனெனில் அவர்களுடைய எதிர்கால நல்வாழ்வை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிப்போர் பெற்றோரும் ஆசிரியருமே ஆவர். தந்தை சபேசனின் கடுஞ்சினமும் கண்டிப்பும் ராஜீவைப் பாதிப்பதுடன், **"அந்தப் பனை ஆத்தா காலிலே போய் மண்டையை உடைச்சுக்கோ அவதான் உனக்கு மார்க் போடணும்"** என்று ஆசிரியர் மற்ற மாணவர்களின் முன்னிலையில் குட்டி, திட்டி அவமானப்படுத்துவதும் அவனை வேதனைப்படுத்துகிறது. மூன்று ஆண்டுகள் மீனுவின் தோழமையில் மன அமைதியும் மகிழ்ச்சியும் கண்ட ராஜீ, அவள் கல்லூரிப் படிப்பு முடித்துவிட்டதால் தன்னை விட்டுப் பிரிந்து ஊருக்குச் சென்று விடுவாள் என்ற கவலையும், தனித்துப் போய் விடுவோம் என்ற அச்சமும் அலைக்கழிக்க மனந் தடுமாறுகிறான். கோட்டி நிலைக்கு ஆளான, இந்த நோயாளி புதிய பிரச்சினைகள் எதையும் கற்பதற்கும் அவற்றிற்குத் தீர்வு காணுவதற்கும் மிகவும் இயலாதவனாக இருக்கின்றான் என்பதற்கேற்ப ராஜீ, மீனுவின் பிரிவைத் தாங்கவோ, தடுக்கவோ வழி காணாது விரக்தி அடைகின்றான்.

இந்நிலையில் கணக்குத் தேர்வு நன்றாகச் செய்யவில்லை என்பதற்காக, **"என்னுடைய பிராப்தகர்மம், இந்த மாதிரி பொறந்து பிராணனை வாங்கறதுக்கு பொறக்காமேயே இருந்திருக்கலாம்டா! இந்தக் கணக்குகள் கூடப் போட வரல்லேன்னா நீ என் பிள்ளையா? சொரணை கெட்ட ஜென்மமே!"** என்று கோபிக்கிற சபேசனின் வசை மொழிகள் அவனைத் தற்கொலைக்கு இட்டுச் செல்கின்றன. போதுமான அளவு நுண்ணறிவற்றவனை, இயல்பான வாழ்க்கையை நடத்த முடியாத பொழுது, அறிவிலி என்கிறோம். இவ்வாறு நுண்ணறிவு மிகக் குறைந்து உளநலம் குன்றிய நிலைகளில் உள்ளவர்களையே உளத்திறன் பற்றாக்குறையினர் (Mentally deficient Persons) என்பர். இவர்களை **"நுண்ணறிவு அறிவின் அடிப்படையில் பேதை (Moron) நனிபேதை (Imbecile), பித்தன் (idiot) எனப் பிரிக்கின்றனர்."** இயல்பான அறிவாற்றலுடையோருக்கு அடுத்த நிலையில் இருப்பவர்களே பேதை, இவனை பிறரிடமிருந்து பரிவுணர்வையும் தங்களைப் புரிந்து கொள்ளலையும் எதிர்பார்க்கின்றனர். எனவே, பெற்றோர்கள் மகிழ்ச்சியுடன் அறிவுத்திறன் குறைவு உடையோரிடம் பழகுதல் வேண்டும். அவர்களைப் புறக்கணித்தலும் கடுமையாகத் தண்டித்தலும் கூடாது. ஆசிரியர்களும் அவர்களிடம் தனிக்கவனம் செலுத்துதல் வேண்டும். அவர்களைப் பயனற்றவர்கள் என்று ஒதுக்கவோ வெறுக்கவோ கூடாது. இக்குறையினைப் போக்குவதற்கு எவ்வளவு புதிய மருத்துவ சிகிச்சை முறைகளை மேற்கொண்டாலும் பெற்றோரும் உற்றார் உறவினரும் ஆசிரியரும் காட்டும் அன்பே தடுப்பதற்குரிய அடிப்படைச் சாதனமாகும்.



Scanned By Scanner App

**தொகுப்புரை**

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும் இனிமையாக அமைவதற்கு உடலும், உள்ளமும் ஒரே சீராகச் செயல்படல் வேண்டும். உளவியல் என்பது உள்ளத்தின் தன்மையினைப் பற்றியது. ஒரு மனிதன் சமுதாயத்தில் எப்படி நடந்து கொள்கிறான். எப்படிப்பட்டவனாக இருக்கிறான் என்பதை அறிய, அவனது செயல் மட்டுமின்றி, அவனது அறிதல் திறன் நினைவாற்றல், மறதி போன்ற மனத்திறனையும் கண்டு ஆராய்வதே உளவியல் ஆகும். வாஸந்தி உளவியல் பயின்றவர். உளவியல் கண்ணோட்டத்தோடு பாத்திரங்களைப் படைத்தவர். இவரது புதினங்களில் மிகுதியும் குடும்ப உறவு நிலையே பெரும்பாலான சிக்கல்களுக்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றது. எனவே உறவுநிலைச் சீரமைக்கு அடிப்படைத் தேவையாக உண்மையான நிலைத்த அன்பைத் தீர்வாகக் காட்டுகிறார் ஆசிரியர்.



Scanned By Scanner App